O.S.No. 310/2013 – Date : 19.01.2026

DW3 – ஐயா முத்து

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் என்ன படித்துள்ளேன் என்றால் எம்.ஏ படித்துள்ளேன். கிராம நிர்வாக அலுவலராக நான் பணியில் இருந்தேன் என்றால் சரி. நான் பணியில் இருந்தபோது சஸ்பென்ட் செய்யப்பட்டேன் என்றால் ஓய்வு பெறும் நாளில் சஸ்பென்ட் செய்தார்கள். வாதியுடன் எனக்கு பேச்சுவார்த்தையில்லை என்றால் சரி. என்னுடைய நிலத்தின் சர்வேப எண் என்ன என்றால் 116/1ஏ, 12ஏ ஆகும்.

1960ல் கிரயம் ஏற்பட்ட விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரி. அதில் நான் சாட்சி கையெழுத்து எதுவும் போடவில்லை என்றால் சரி. பிரமாண பத்திரிக்கை தயார் செய்ய வக்கீலுக்கு யார் தகவல் கொடுத்தார்கள் என்றால் என்னை அழைத்து வந்த 13ம் பிரதிவாதி–சுப்ரமணி தகவல் கொடுத்தார். வழக்கு யார் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் ராமசாமி சுப்ரமணி வகையராவிற்கு எதிராக தாக்கல் செய்துள்ளார். இந்த சொத்து பூர்வீக சொத்தா விலைக்கு வாங்கிய சொத்தா என்றால் விலைக்கு வாங்கிய சொத்து. 4 பேர் சேர்ந்து கூட்டாக சேர்ந்து வாங்கினால் பத்திரம் மூலமாகதான் பிரித்துக்கொள்ள முடியும் என்றால் சரி. பூர்வீக சொத்துக்களை வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொள்ள முடியும் என்றால் சரி. எந்த

தேதியில் யார் யார் முன்னிலையில் வாய்மொழி பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்று எனக்குத் தெரியாது என்றால் சரி. 1960க்கு பின்னர் ஏற்படுத்தப்பட்ட கிரய ஆவணங்களில் நான் நேரடியாக சாட்சி இல்லை, நேரடியாக எனக்குத் தெரியாது என்றால் சரி. எந்த சர்வே எண்ணில் யார் யார் பெயருக்கு பட்டா கொடுத்துள்ளார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் ஆவணங்களை பார்த்து சொல்ல முடியும். 13ம் பிரதிவாதி–சுப்ரமணி அழைத்துதான் நான் சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் சரி. எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரி.

13ம் பிரதிவாதி–சுப்ரமணி வகையரா மற்றும் கந்தசாமி வகையரா என்ன பதில் போட்டிருக்கிறார்கள் என்று தெரியாது என்றால் சரி. சுப்ரமணியின் அப்பா பெயர் என்ன என்றால் முத்துகவுண்டர். முத்துகவுண்டருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 2 மகன்கள் மட்டும்தான், பெண் பிள்ளைகள் இல்லை. முத்துகவுண்டரின் அப்பா பெயர் என்ன என்றால் செங்கோட கவுண்டர். செங்கோட கவுண்டருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 2 மகன்கள், 2 பெண்கள். முத்துகவுண்டரின் சொத்துக்கள்தான் அவரது இரண்டு மகன்களுக்கு வந்தது என்றால் சரி. செங்கோட கவுண்டரின் சொத்துக்கள் அவரது வாரிசுகளுக்கு வந்தது என்றால் சரி. எனக்கு

வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றும் நான் சுப்ரமணிக்கு வேண்டிய நபர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில், வாதி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை தழுவிக் கொள்ளப்பட்டது.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal District Judge, Salem.